பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 14 (30—10—68) புதன் ★ வெளியூர் : ஐப்பசி 15 (31—10—68) வியாழன் [இதழ் : 111

மாநகராட்சித் தேர்தல் முடிவு

திங்கள் இரவே அறிஞர் அண்ணாவுக்குத் தெரிவிக்கப்பட்டது

சென்னை, அக். 30—

மாநகராட்சித் தேர்தல் முடிவுகள், முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குத் திங்க ளன்று இரவே தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

'ஒருமைப்பாட்டுக்கு உகந்த செயலல்ல'

மத்திய அரசின் அகவிலைப் படி உயர்வுக்கு எதிர்ப்பு

அறிவாய்ந்த கொள்கை வகுக்க வற்புறுத்தல்

நிர்வாகச் சீர்திருத்தக் குழு யோசனை பற்றி அனுமந்தையா

பெங்களூர், அக். 30—

"அண்மையில் மத்திய அரசு தனது ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தி, ஆண்டுக்கு ரூ. 30-கோடிவரை அதிகச் செலவு ஏற்படும்படிச் செய்ததை ஏற்றுக்கொள்வதற்கில்லை; கடந்த ஓராண்டில், மத்திய அரசு ஊழியர்களின் அகவிலைப் படி உயர்வால் ரூ. 60-கோடி செலவு அதிகரித்துள்ளது; இதன்மூலம் நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் ரூ. 1.25 வரை அதிகச் சுமை ஏற்பட்டுள்ளது.

"நாட்டில் ஒரேவிதமான குடியுரிமைதான் இருக்கிறது; மத்திய அரசு ஊழியருக்கு ஒருவகை வாழ்க்கைத்தரமும், மாநில அரசு ஊழியருக்கு ஒருவித வாழ்க்கைத்தரமும் இருந்துவருவது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு உகந்ததாகாது."

— இவ்வாறு, நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு. அனுமந்தையா கருத்தறிவித்துள்ளார். மாநில மின்சார வாரிய ஊழியர் சங்கக் கூட்டத்தில் அவர் பேசுகையில், 'நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அறிவாய்ந்த கொள்கை உருவாக்கப்பட வேண்டும்' எனவும் வற்புறுத்தினர்.

"நாட்டில் நிலவும் விலைவாசிகளையும் வாழ்க்கைச் செலவினையும் ஓர் உயர்தரக் குழு (கமிஷன்) ஆராய வேண்டும்; வாழ்க்கைச் செலவு அடிப்படையிலேயே ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

"காப்பு வரி விதிப்பைவிட விலைகளும், வாழ்க்கைச் செலவுகளுமே நாட்டின் பொருளாதாரம் உருவாவதற்கு முக்கிய இடம் பெறுகின்றன என்றும், ஓர் அறிவாய்ந்த விலை நிர்ணயமும், வாழ்க்கைச் செலவு நிலவரமும்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்" என்று குழு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"மத்திய — மாநில அரசுகளின் ஊதியக் கொள்கையினை சமநிலைப் படுத்தவும், ஊதியத் தொடர்பான பிரச்சினைகளில் கருத்துச் செலுத்தவும் மேற்சொன்ன குழுவுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்" என்றார் திரு. அனுமந்தையா.

அவர் மேலும் கூறியதாவது :—

'நாட்டுப் பொருளாதாரத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ளத் தவறி — தொழிற் சங்கங்களின் வற்புறுத்தலுக்குப் பணிந்து — ஊதிய விகிதங்களை உயர்த்திக்கொண்டே சென்றால், பொருளாதாரம் சீர்குலைந்துவிடும்.

சாதாரண மனிதனின் நலனைக் கருதி, ஊதியக் குழுக்களின் கருத்தையோ, வேறு யாரேனும் கூறுவதையோ கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

முதலாளியும் தொழிலாளியும் சேர்ந்தே விற்பனைக் களத்தை உருவாக்கி, வாங்குவோரைச் சுரண்டுகின்றனர்!

மக்கட் தொகையில் பெரும்பான்மையாக உள்ள ஏழை உழவர்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்!

தொழிலாளர் சட்டங்கள், பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் ஒரேவிதமாக இருக்கக்கூடாது; ஏனெனில் பொதுத் துறை, இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கவில்லை.

"பொதுத் துறையில், தொழிலாளர்களுக்கும் — நிர்வாகத்துக்குமிடையே ஏற்படும் தகராறுகளும் பூசல்களும் தீருவதற்கு வேலை நிறுத்தமோ, கதவடைப்போ வழியல்ல; பேச்சுவார்த்தை மூலமுமோ, நடுவர் தீர்ப்பின் மூலமோ, அல்லது நாடாளுமன்றத் தலையீடு மூலமோதான் தீர்வு காணவேண்டும்."

பீகாரில் சட்டம்—ஒழுங்குபடும்பாடு

போலீசாருக்குக் கத்திக் குத்து

துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி!

ராஞ்சி, அக். 29—

இன்று இங்கு ஒரு கும்பல், ஒரு போலீசு கான்ஸ்டபிளைக் கத்தியால் குத்தியது.

ராஞ்சி மாவட்டத்தில் கி.பு.கோ. 144 பிரிவின்கீழ் தடையுத்தரவு நடைமுறையில் உள்ளது.

போலீசு கான்ஸ்டபிள் அணிந்திருந்த உத்தியோக உடைக்குத் தீவைக்க முயற்சி செய்யப்பட்டது; ஆனால், அவரை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்; அவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

அந்த இடத்தில் ஒரு தனியார் பஸ்ஸுக்குத் தீ வைத்தனர்.

அக். 27-ம்நாள் இரவில் செயின்பூர் என்னும் இடத்தில் போலீசார் துப்பாக்கிச் சூடு செய்ததுபற்றி மக்கள் கொதிப்படைந்தனர். துப்பாககிச் சூட்டில் மூவர் உயிரிழந்தனர்.

பம்பாயில் நிலநடுக்கம்

30 வினாடிகள் நீடிப்பு

சென்னை, அக். 30—

பம்பாயில் நேற்றுப் பிற்பகல் நிலநடுக்கம் ஏற்பட்டு 30 வினாடிகள் நீடித்தது.

புனா, கோலாப்பூர், ஹுப்ளி ஆகிய இடங்களிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது; ஆனால், சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கொய்னா, கராட், சதாரா ஆகிய இடங்களிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது; ஆனால், உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ ஏதும் இல்லை எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

காஷ்மீர் பற்றிய பேச்சு வார்த்தை

காஷ்மீர் பற்றி ஷேக் அப்துல்லாவுடன் புதிதாகப் பேச்சுத் துவங்கலாம் என்று திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறிய யோசனையை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதற்கு உடனடியாக வாய்ப்பு எதுவுமில்லை என்று விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சனநாயகத்துக்கு ஆபத்து?

அரசியல் சட்டத்தைச் சீர்திருத்தாவிடில் இராணுவ ஆட்சிதான்!

சென்னை, அக். 30—

"இந்திய சனநாயகத்திற்குப் புத்துயிரூட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளாவிடில், மத்தியக் கட்டத்தில், அனைத்தும் சீர்குலைந்துவிடும்; தற்போதுள்ள அரசியல் சட்ட அமைப்பின்படி, குடியரசுத் தலைவர் ஆட்சியை மத்தியில் ஏற்படுத்த இயலாது; ஒரே மாற்று வழி — இராணுவச் சர்வாதிகாரம்தான்! இதன் விளைவு, பஞ்சமும் பட்டினியும், சாவுகளுமேயாகும்"

என்று, 'இந்திய சனநாயகத்தில் அளவுக்கும் அதிகமான அரசியல் நெருக்கடி' என்ற தலைப்பில் உரையாற்றுகையில், திரு. ஆர். ஏ. கோபால்சாமி சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார். அவர் மேலும் இத்தொடர்பில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அடிப்படை அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை — முக்கியமாகக் கட்சி முறை சம்பந்தமாக உடனடியாக ஏதும் செய்யாவிடில், 1972-ல் நடைபெறவிருக்கும் அடுத்த பொதுத் தேர்தல்தான் நாட்டில் நடைபெறும் கடைசிப் பொதுத் தேர்தலாக இருக்கும்.

"அண்மைக் காலமாகப் பல குழப்பங்களை, கட்சி முறை ஏற்படுத்தியுள்ளது; 'அரசியல் சட்டப்படி அரசாங்கத்தை நடத்துவது அசாத்தியம்' என்ற நிலை இதன் விளைவாகத் தோன்றியுள்ளது.

"இந்திய சனநாயகம் புத்துயிர் பெற்று நிலைத்திருக்க வேண்டுமானால், நாடு முழுவதிலும் இரு கட்சி முறை உருவாக்கப்பட வேண்டும்.

"தமிழகத்திலும் குசராத்திலும் மட்டுமே இரு கட்சி முறை தற்போது உள்ளது; இந்நிலை மற்ற மாநிலங்களிலும் ஏற்படுமானால் பரிகாரத்துக்கு வழி ஏற்படும்."

காங்கிரசுக்கு ஆதரவு பெருகுகிறதாம்

நிஜலிங்கப்பா போடும்கணக்கு

புதுடில்லி, அக். 30—

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் நிஜலிங்கப்பாவைச் சந்தித்து, சென்னை மாநகராட்சித் தேர்தல் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாராம்.

பிறகு திரு நிஜலிங்கப்பா செய்தியாளருக்கு அளித்த பேட்டியில், 'மாநகராட்சித் தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்குச் சாதகமானவை; காங்கிரசுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது' என்று கூறியிருக்கிறார்.

காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணம்

நிஜலிங்கப்பா கண்டுபிடிப்பு!

லூதியானா, அக். 30—

"கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி வீழ்ச்சியடைந்ததற்கு, கட்சிக்காரர்களிடையே கோஷ்டிச் சண்டைகள் மலிந்ததுதான் காரணம்"

என்று அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா கூறினார்.

"சுதந்திரப் போராட்டத்தின் போது காங்கிரசுக்காரர்களிடையே இருந்த ஒற்றுமை உணர்வும் தியாக உள்ளமும் இப்போது மறைந்துவிட்டது" என்றார்.

ஆளுநர்கட்கு அதிக அதிகாரம்

அரசாங்கச் சம்பளத்துக்கு உச்சவரம்பு

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் யோசனை!

புதுடில்லி, அக். 29—

"மாநிலங்களின் நிர்வாகம் சீராகவும் திறமையாக நடைபெறுவதற்கு ஆளுநர்களின் பணி முக்கியமானதாக இருக்கவேண்டும்" என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

'ஆளுநர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும்; ஆளுநர்களின் பதவியே தேவையில்லை' என்ற காங்கிரசல்லாத எதிர்க் கட்சிகளின் கருத்துக்கு நேர்மாருக, மாநில நிர்வாகம் பற்றி மேற்சொன்ன யோசனைகளை நிர்வாகச் சீர்திருத்தக் குழு வெளியிட்டிருக்கிறது.

40 சதவிகிதமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் -- எழுத்து மூலம் -- 'சட்டமன்றம் கூட்டப்பட வேண்டும்' என்று வேண்டிக் கொண்டால், முதலமைச்சர்களின் யோசனைக்கு மாருகவும் சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் இக்குழு தன்னுடைய யோசனையாகச் சொல்லியிருக்கிறது.

பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் சில திங்களுக்குமுன் ஏற்பட்ட நெருக்கடியை மனத்தில்கொண்டே மேற்கண்ட கருத்துக்களை நிர்வாகச் சீர்திருத்தக் குழு சொல்லியிருக்கிறது.

"நிர்வாகத் தேவைக்கு ஓரளவு இடம் தருகின்ற வகையில் அமைச்சரவையின் அளவு வரையறுக்கப்பட வேண்டும்" என்று ஆய்வுக் குழு கூறுகிறது.

"ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 6 சதவிகிதத்துக்கு அதிகப்படாத வகையில், துணையமைச்சர்கள் உட்பட அமைச்சர்களின் எண்ணிக்கை அமைய வேண்டும் என்று ஆய்வுக்குழு கருதுகிறது. அவசியமானல், 'சட்டத்தின் மூலம் இதைச் செயல்படுத்த வேண்டும்' எனக் குறிப்பிட்டிருக்கிறது.

சட்டமன்றங்களுக்கு மிகச் சிறந்த வேட்பாளர்களையே அரசியல் கட்சிகள் நிறுத்த வேண்டும் என்றும், தங்களுடைய திறமை—நாணயம்—தகுதி ஆகியவற்றின் மூலம் மக்களிடம் கௌரவம் பெற்றவர்களாக வேட்பாளர்கள் விளங்க வேண்டும் என்றும் குழு கூறுகிறது.

"மத்திய -- மாநில அரசுகள் ஆகியவற்றின் பணிகள், பொறுப்புக்கள் ஆகியவற்றுக்கிடையே தெளிவான பாகுபாடு செய்ய வேண்டும்; இது கண்டிப்பாக அரசியல் சட்டத்தில் விதித்துள்ளபடி செய்யப்பட வேண்டும். உணவு, வேளாண்மை, கூட்டுறவு ஆகிய துறைகளில் இத்தகைய பாகுபாடு மங்கியிருக்கிறது" என்று ஆய்வுக் குழு கருதுகிறது.

"மாநில நிர்வாக வரம்புகளுக்கு உட்பட்ட எல்லாப் பொறுப்புக்களையும் மத்திய அரசு கைவிட வேண்டும்; இதனல் செலவும் குறையும்; பணியும் இணக்கமாக நடைபெறும்" என்றும் குழு கூறியிருக்கிறது.

நிர்வாகச் செலவு

மாநிலங்களில் நிர்வாக இயந்திரம் பெரிதாக ஆகி வருகிறது என்பதையும் ஆய்வுக் குழு சுட்டிக்காட்டி யிருக்கிறது.

"ஊழியர்களின் சம்பளங்களும் படிகளுமே ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மொத்தச் செலவுகளில் 70 சதவிகிதத்தை எட்டிவிட்டது" என்று ஆய்வுக் குழு கூறியிருக்கிறது; அந்த மாநிலத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

"மொத்த ரெவினியூ செலவுகளில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் ஊழியர்களின் சம்பளச் செலவுகள் ஆகக்கூடாது; இலாகாக்களும், சிப்பந்திகளும் பெருகுவது பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட வேண்டும்" என்றும் குழு தெரிவித்திருக்கிறது.

அதிகபட்ச சம்பளம் --- குறைந்தபட்ச சம்பளம் ஆகியவற்றுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வு பற்றி ஆய்வுக் குழு கவலை தெரிவித்திருக்கிறது; 'மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ. 125 ஆகவும், அதிகபட்ச சம்பளம் ரூ. 2,500 ஆகவும் இருக்கவேண்டும்' என்று குழு கூறியிருக்கிறது.

"அனைத்திந்தியப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில், மாநில பப்ளிக் சர்வீசு கமிஷன் நெருக்கமாகத் தொடர்பு கொள்ள வேண்டும்; துணைக் கலெக்டர், போலீசு உதவி சூப்பரிண்டெண்டு ஆகிய பதவிகளுக்கு நேரடித் தேர்வு நடைபெற வேண்டும்; மாவட்ட அதிகாரிகள் மட்டத்தில் உள்ள பதவிகளுக்குப் பதவி உயர்வுகள் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும்" என்றும் குழு கூறியிருக்கிறது.

டாக்டர் மில்லருக்கு திருக்குறள் அன்பளிப்பு

குடியாத்தம், அக். 30—

அண்ணா அவர்களுக்குச் சிகிச்சையளித்த டாக்டர் மில்லருக்கு, ஆம்பூர் நகராட்சித் தலைவர் ஆர். சம்பங்கி எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"உங்கள் (டாக்டர் மில்லர்) சேவை, உலக மக்களுக்கு நீண்ட நாள் கிடைக்க வேண்டும்."

மடலுடன், திருக்குறள் ஒன்றையும் அனுப்பியிருக்கிறர்; அது திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பாகும்.

மாணவர்கட்குப் போலீசுப் பயிற்சி

பயிற்சி நிலையத் தலைவர் தரும் கருத்து

வேலூர், அக். 30—

"பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், தேசிய மாணவர்படை (என். சி. சி.) பயிற்சிக்குப் பதிலாக, போலீசுப் பயிற்சி அளிக்கலாம்.

"துப்பாக்கி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு மட்டும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்காமல், காவல் காப்பது போன்ற பயிற்சியும் கற்றுத்தர வேண்டும்.

"இப்படிப்பட்ட பயிற்சிகள் அளித்தால், முக்கியப் பிரமுகர்கள் வருகையில் அல்லது திருவிழாக்களின்போது மாணவர்கள், போலீசாருக்கு உதவியாக இருப்பார்கள்"

என்று, வேலூர் போலீசுப் பயிற்சி நிலைய முதல்வர் எம். பழனிவேலு கருத்தறிவித்துள்ளார்.

டில்லிப் பத்திரிகைகள் மீது வழக்கு

வகுப்புத் துவேஷத்தைத் தூண்டியதாகக் குற்றச்சாட்டு

புதுடில்லி, அக். 28—

டில்லியிலுள்ள பல்வேறு நாளிதழ்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. ஜன சங்கம், இராஷ்டிரிய சுயம் சேவா சங்கம் ஆகிய கட்சிகளின் கொள்கைகளைத் தாங்கிவரும் 'ஆர்கனைசர்' மற்றும் இரண்டு உருதுப் பத்திரிகைகள் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டும் வகையில் எழுதியதாக அவைமீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற நடவடிக்கைகள் ஆந்திரம், வங்கம், மாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வெளியாகும் மற்றும் சில இதழ்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஸ்ரீநகரில் சூலையில் கூடிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுத் துவக்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி இவ் வழக்குகள் போடப்பட்டுள்ளன.

மக்கள் குறைகள் உடனுக்குடன் களையப்படுகின்றன

செங்கற்பட்டு மாவட்டத்தில் புரட்சித் திட்டம்

சென்னை, அக். 29—

"கிராமங்கள்தோறும் நில வருவாய்த்துறை ஊழியர்கள் நேரடியாகச் சென்று மக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அவர்களின் குறைபாடுகளை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்யப்பட்டு வருகின்றன"

என்று, செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் இலட்சுமிகாந்தன் பாரதி, செய்தியாளர்களிடம் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :--

"மக்கள் குறைகளை அவ்வப்போது நிறைவேற்றும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

"கடந்த செப்டம்பரில் பொது மக்களிடமிருந்து 8,855 மனுக்கள் வந்தன; அவற்றில் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய 2,064 மனுக்கள் பரிசிலனைக்கு உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுக் குறைபாடுகள் நீக்கப்பட்டன."

பி. யூ. சி. வகுப்பில் சேரப் புதிய தகுதிகள்

திருச்சி, அக். 30—

1970 மார்ச் திங்களில் நடைபெறவிருக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாறுதல் செய்யப்படவிருக்கிறது.

இதையொட்டி, புகுமுக (பி.யூ.சி.) வகுப்பில் சேரவிருக்கும் மாணவர்களுடைய தகுதி விதிகளையும் மாற்றியமைப்பதற்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் தீர்மானித்திருக்கிறது.

மொழித் தேர்வில் இரண்டில், ஒரு மொழியில் குறைந்தபட்சம் 40 மார்க்குகளும், மற்றொரு மொழியில் குறைந்தபட்சம் 30 மார்க்குகளும், ஏனைய மூன்று பாடங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 35 மார்க்குகளும் பெற்றிருக்கவேண்டும்.

ஆனல், எல்லாப் பாடங்களிலும் மொத்தத்தில் குறைந்தபட்சம் 215 மார்க்குகள் வாங்கவேண்டும்.

இந்தத் தகுதியின்கீழ் தேர்ச்சி பெற்றிருக்கும் மாணவர்களே கல்லூரியில் சேருவதற்குத் தகுதிபெற்றவர்களாவர்.

அதிக அதிகாரம்கோருவதுகூடாதாம்

நிஜலிங்கப்பாவின் மிரட்டல்

மாநில அரசுகளே ஒழிக்கப்படும் என்கிறர்

அமிருதசரஸ், அக். 29—

"மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் எனக் கோரப்படுகிறது; அவ்வாறு தரப்படுவதானல், மத்திய அரசு பலவீனப்படும்; மத்திய அரசு பலவீனப்பட்டால், நாளாவட்டத்தில் நாடு பிளவுபடும்!

"மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறவர்கள் கற்பனை உலகில் மிதக்கிறவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதால் நாட்டுக்கு நன்மை ஏற்படாது"

என்று அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறியுள்ளார். பஞ்சாப் மாநில இடைத் தேர்தலுக்கான பிரசாரத்தைத் துவக்கிவைத்து அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்காக அவசியம் ஏற்படுமானல் மாநில அரசுகளை ஒழித்துவிட்டு மத்தியில் ஒரே அரசாங்கம் இருப்பதற்கு காங்கிரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

நாடு பிளவுபடுவதைவிட மத்திய அரசாங்கம் மட்டுமே இருப்பது மேலானது!

மொழிவழியில் மாநிலங்கள் அமைக்கப்பட்டதால், பல பிரச்சினைகள் ஏற்பட்டன. மாநிலத்துக்கு மாநிலம் எல்லைத் தகராறு. இது நீடிக்குமானல் மாற்று வழி குறித்து யோசிக்க வேண்டியிருக்கும்.

இந்த நாடு, குறிப்பிட்ட எந்த வகுப்பாருக்கும் சொந்தமானது அல்ல. இந்நாடு எல்லா இந்தியருக்கும் சொந்த நாடு.

இந்தியா பிளவுபட்டு மீண்டும் அடிமையாவதை அனுமதிக்க மாட்டோம்."

தமிழக அரசின் பரிசுச் சீட்டுகள்

இரண்டாவது குலுக்கலுக்கு 6 வரிசைகள் வெளியிடப்படும்

திருச்சி, அக். 30—

மேலும் இரு வரிசை பரிசுச் சீட்டுகளை விற்பனைக்கு வெளியிடுவதெனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இரண்டாவது பரிசு குலுக்கல், நவம்பர் 20-ம் நாள் நடைபெறவிருக்கிறது; இதற்காக 'ஐ'—'ஜே' — 'கே' — 'எல்'—என்று நான்கு வரிசை (40 இலட்சம்) சீட்டுகள் வெளியிடப்பட்டன; இவை அனைத்தும் இரண்டொரு நாட்களிலேயே விற்பனையாகி விட்டன; பல இடங்களில் 'பரிசுச் சீட்டுகள் கிடைக்கவில்லை' என்ற குறைபாடு நிலவியது.

எனவே, மேலும் இரு வரிசை (20 இலட்சம்) பரிசுச் சீட்டுகள் வெளியிடத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

'எம்'—'என்' என்ற வரிசைகளில் இவை வெளியிடப்படும்; 'எம்' வரிசை பரிசுச் சீட்டுகள் விற்பனைக்கு வந்துவிட்டன; 'என்' வரிசை. விரைவில் வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

காவிரித் திட்டத்துக்கு அனுமதி

அதிகாரபூர்வமான அறிவிப்பு

சென்னை, அக். 28—

சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிரந்தரமாகத் தீர்க்கும் வகையில் காவிரியாற்றின் நீரைக் கொண்டுவரும் திட்டத்துக்கு மத்திய அரசின் அனுமதியளித்தது பற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்புக் கிடைத்துவிட்டதாகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி தெரிவித்தார்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் இத்திட்டத்துக்கு ரூ. 21,30,00,000 செலவிடப்படும்.

இத்திட்டத்தைத் தொடர்ந்து நீர் வழங்குமுறை, வடிகால் வசதி, புதை சாக்கடை வசதி ஆகியவையும் விரிவுபடுத்தப்படும்.

அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்க!

கஜேந்திர கட்காரும் சொல்கிறர்

பம்பாய், அக். 29—

"இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் செயல்படும்விதத்தை முக்கியமாக நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு அதன் முக்கியத்துவத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும்"

என்று முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதியும் பம்பாய் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான டாக்டர் கஜேந்திர கட்கார் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மறுமலர்ச்சிக்கு ஏற்பப் புதிய நடவடிக்கைகளை உருவாக்க அரசியலில் விஞ்ஞான நிபுணர்கள் முன்வரவேண்டும்.

கேரள அரசுக்கு மத்திய அரசுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினையின் விளைவாக அரசியல் சட்டச் சிக்கல் தோன்றிவருகிறது.

காங்கிரசல்லாத மாநிலங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யவேண்டும் எனவும் நாட்டுக்கு இப்போது எவ்வகையான ஆட்சி முறை வேண்டும் என்பதை அறிய தற்போதைய அரசியல் நிலைமையைக் கணக்கெடுக்கவேண்டும் என்றும் கேட்டுவருகின்றன.

கடந்த பொதுத் தேர்தல்வரையில் நாடு முழுவதும் தொடர்ந்து ஆட்சி செலுத்திவந்த காங்கிரசு, கூட்டாட்சி நடைமுறைகளையும், அதற்கான வழிமுறைகளையும் உருவாக்கத் தவறிவிட்டது. அதன் விளைவாகக் கூட்டாட்சி முறை செயல்படுவதில் ஐயப்பாடுகள் தோன்றிவிட்டன."

மாநகராட்சிப் புதிய உறுப்பினர்கள் பதவிக் காலம்

சென்னை, அக். 30—

சென்னை மாநகராட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் நவம்பர் 1-ம் நாள் நடுப்பகல் முதல் தொடங்குகிறது.

'உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றுண்டுகள்' என்ற கணக்கின்படி, 1971-ம் ஆண்டு நவம்பர் 1-ம் நாள் வரையில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி வகிப்பர்.

1969-ம் ஆண்டில் தமிழக அரசின் விடுமுறை நாட்கள்

சென்னை, அக். 30—

1969-ம் ஆண்டில் ஞாயிற்றுக் கிழமைகளோடு கீழ்க்கண்ட நாட்கள் அரசாங்கப் பொது விடுமுறை நாட்கள் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது:—

சன. 1: புத்தாண்டு நாள்; சன. 13: போகி; சன. 14: பொங்கல்; பிப். 28: பக்ரீத்; மார்ச் 19: தெலுங்குப் புத்தாண்டு நாள்; மார்ச் 29: மொகரம்; ஏப். 4: பெரிய வெள்ளிக் கிழமை; மே 1: மே தினம்; ஜூன் 30: பாங்கி அரையாண்டுக் கணக்கு முடிவு; ஆக. 15: சுதந்தரத் திருநாள்; செப். 15: விநாயகர் சதுர்த்தி; அக். 2: காந்தியடிகள் பிறந்த நாள்; அக். 20: ஆயுதபூசை; நவ. 8: தீபாவளி; டிச. 11: ரம்சான்; டிச. 25: கிறித்துமஸ் விழா; டிச. 31: பாங்கி ஆண்டுக் கணக்கு முடிவு.

சாதாரணமாக விடுமுறை விடப்படும் நாட்களான குடியரசுத் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு நாள், ஆயுதபூசை ஆகிய மூன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வருவதால், அவைகளுக்குப் பதிலாக மே நாள், புத்தாண்டு நாள், விநாயக சதுர்த்தி ஆகிய நாட்கள் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜூன் 30, டிச. 31 ஆகிய நாட்கள் தமிழக அரசு அலுவலகங்களுக்கும், பாங்கி அல்லாத கருவூலங்களுக்கும் விடுமுறை நாடகள் அல்ல

1969-ல் சனவரி மாதம் 2-ம் வாரத்தில் வரும் சனிக்கிழமை தவிர, மற்ற எல்லா மாதங்களிலும் இரண்டாம் சனிக்கிழமை விடுமுறை நாட்களாகும்.

1969-ம் ஆண்டு தீபாவளி நவ. 8-ந் தேதி சனியன்று—அதாவது இரண்டாவது சனிக்கிழமையான விடுமுறை நாளன்று வருகிறது; அதையொட்டி, 1969 மே 31 சனிக்கிழமையை, 'திருவள்ளுவர் முக்தி நாள்' ஆக விடுமுறை விடுவதென்று அரசு முடிவு செய்திருக்கிறது; மாநில அரசு அலுவலகங்களுக்கு மட்டும்தான் அந்த விடுமுறை விடப்படும்.

1969 சனவரி 11 சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும்; அதற்குப் பதிலாக 1969 சனவரி 15 புதன்கிழமை, மாட்டுப் பொங்கலுக்கு விடுமுறை விடப்படும்.

மத்திய அரசு ஊழியர் வேலைநிறுத்தத்துக்குத் தடை

நாடாளுமன்றத்தில் மசோதா வருமாம்

புதுடில்லி, அக். 29—

மத்திய அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத்தைத் தடைசெய்யும் வகையில் கடந்த செப்டம்பர் 13-ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக நவம்பர் 11-ஆம் நாள் கூடவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தில் ஒரு மசோதாவைக் கொண்டுவர மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாம்.

அவசரச் சட்டத்துக்குப் பதில ஒரு மசோதாவைக் கொண்டுவரா விட்டால் அந்த அவசரச் சட்டம், நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கி 6 வார காலத்துக்குள் தானாகவே காலாவதியாகிவிடும்,

கடன் பத்திரங்கள் விற்பனையாகிவிட்டன!

சென்னை, அக். 30—

தமிழக மின்சார வாரியம் வெளியிட்டுள்ள இரண்டாவது வரிசைக் கடன் பத்திரங்கள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன; சந்தா வாங்குவது நிறுத்தப்பட்டது.

கடன் பத்திரங்களில் பணம் போட்ட பாங்கர்கள், எல்,ஐ.சி., தொழிலதிபர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு மின்சார வாரியத் தலைவர் நன்றி தெரிவித்தார்.

பிரிட்டனிலும் 'சேரி'ப் பிரச்னை

பத்தாண்டுகளில் தீர்த்துவிட முயற்சி

வாழ்க்கைநிலை உயர்ந்துகாணப்படும் பிரிட்டனிலும் சேரி வாழ்வோர் இருந்துவருகின்றனர் என்பது வியப்பாயிருப்பினும் உண்மையேயாகும். ஆனால் ஆட்சியாளரின் தீவிர முயற்சியால் முக்கால் பங்கு சேரிகள் ஒழிக்கப்பட்டுவிட்டன.

1950-ம் ஆண்டுமுதல் 1967-ம் ஆண்டுவரையிலான கடந்த 17 ஆண்டுகளில் சுமார் 20-இலட்சம் சேரிவாழ் மக்களுக்குப் புதிய குடியிருப்பு கட்டிக் கொடுத்திருக்கிறது அரசு; இதில் ஒரு சங்கடம் என்னவென்றால், ஒரு பக்கம் சேரிகள் ஒழிக்கப்பட்டு வரும்போது மறுபக்கம் புதிய சேரிகள் தோன்றிக் கொண்டே இருப்பதுதான்!

புதிய சேரிகள் தோன்றாமல் பார்த்துக்கொள்வதும் எளிதான காரியமல்ல; அதுபற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் எந்த அரசும் மக்களின் கோபத்திற்கு ஆளாவது நிச்சயம்.

ஆயினும், பொது நன்மையை மட்டுமே மனத்தில் கொண்டு -- பிற விளைவுகளைப் பொருட்படுத்தாமல் -- அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஏறத்தாழ 75-சதவிகிதம் சேரிகள் ஒழிக்கப்பட்டுவிட்டன.

சேரி ஒழிப்பு எப்படி நடக்கிறதென்றால், 'குடியிருப்பிற்குத் தகுதியில்லாத நிலை'யில் உள்ள வீடுகளை இடித்துவிடுமாறு அரசு ஆணையிடும்; இடித்தபிறகு அந்த நிலம் தனிப்பட்டவரின் உடைமையானால் அவருக்கு எந்தவித இழப்பீடும் கொடுப்பதில்லை; மாறாக, நிலத்தின் உரிமை அவருக்கே தொடர்ந்து இருந்துவரும்.

இதுபோன்ற நிலையில் உள்ள கட்டிடங்களை 'ஆர்ஜிதம்' செய்தால் கட்டிடத்தின் அப்போதைய மதிப்பு அவருக்கு நட்ட ஈடாகக் கொடுக்கப்பட்டு, நிலத்தில் அரசாங்கம் புதிய கட்டிடம் கட்டிக்கொள்ளும் உரிமை பெறுகிறது.

எஞ்சியுள்ள சேரிகளை இப்போதைய திட்டப்படி அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் ஒழித்துவிட அரசு தீர்மானித்துள்ளது.

ஒப்பந்தத்தை மீறி நாகர்களின் கலகம்

புதுடில்லி, அக். 29—

நாகாலாந்தில், தலைமறைவு நாகர்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி நடந்துகொண்டிருக்கிறார்கள்.

சீனாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் அவர்கள் ஏராளமான ஆயுதங்களைப் பெற்றிருக்கின்றனர்.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையை இது கெடுத்துவிட்டது.

"இத்தகைய நடவடிக்கைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டாலன்றி பேச்சுவார்த்தை நடத்துவதில் ஒரு விதப் பயனும் இராது" என்று இந்திய அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கண்ணாடியால் வீடு

'கண்ணாடி வீட்டில் இருப்பவர் கல்லெறியலாகாது' என்று சொல்வது உண்டு.

'இது என்ன கண்ணாடி வீடு' என்று வியப்பவர் உண்டு.

பழமொழியில் அது என்ன பொருளை உணர்த்தினாலும், இப்போது உள்ளபடியே கண்ணாடியில் வீடு கட்ட முடியும்.

தற்கால வீடுகளின் சுவர்களில் பெரும்பாலான இடத்தை சன்னல்கள் நிரப்பிவிடுகின்றன; இந்தச் சன்னல்கள் கண்ணாடியால் அமைந்துவிடுகின்றன; ஆனாலும், சுவரே இனி கண்ணாடியால் இருக்கும் -- இருக்க முடியும். இதற்காக கண்ணாடியால் ஆன செங்கற்கள் பிரிட்டனில் தயாராகின்றன.

செயற்கை நாரிழையை கண்ணாடியில் கலந்து இப்போது படகு கூடக் கண்ணாடியில் செய்யத் தொடங்கிவிட்டனர் -- பிரிட்டனில்!

தெ. ஆ. மாவட்டத்தில் கிணறு வெட்டக்கடன்

ரிசர்வ் பாங்கி மூலம் ஏற்பாடு

சடலூர், அக். 29—

"புதிய கிணறுகளைத் தோண்டுவதற்காகக் கடன்களை வழங்க ரிசர்வ் பாங்கி முன்வந்துள்ளது; ஆனால், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் கடன்களைத் தர மறுத்திருக்கிறது"

என்று தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

இப்பிரச்சினை குறித்து ரிசர்வ் பாங்கி கவர்னருடன் நவ. 1-ல் தாம் விவாதிக்கப்போவதாக அவர் குறிப்பிட்டார்.

கடம்புலியூர் பகுதியில் சுமார் 24 கிராமங்கள் தண்ணீர்ப் பற்றுக்குறையால் அவதிப்படுவதாகவும், இதனைச் சமாளிக்க ரூ. 5 5 இலட்சம் பெறுமான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அரசிடம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களும் கிணறு ஒன்றுக்கு ரூ. 5 000 வீதம் வழங்க முன்வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

"திருக்கோயிலூர் பகுதியில் சுமார் 4-ஆயிரம் ஏக்கர் நிலம் சாத்தனூர் அணை ஆயக்கட்டின் கீழ் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் அணைக்கட்டுகள் அனைத்திலும் நீர்த்தேக்க நிலை இந்த ஆண்டு திருப்திகரமாக இருப்பதால் இரண்டாவது போசாகுபடிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சூரிய ஒளியால் இயங்கும் கலங்கரை விளக்கம்

சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி தயாரித்து -- அந்தச் சக்தியைக் கொண்டு கலங்கரை விளக்கத்தை இயக்கலாம் என்று கண்டுபிடித்து-- அதனைச் செயல்படுத்தி -- ஒரு கலங்கரை விளக்கமும் பிரிட்டனில் அமைக்கப்பட்டுள்ளது; அது திருப்திகரமாக இயங்கியும் வருகிறது.

இலண்டனின் சிறப்புமிக்க தேம்ஸ் நதியில் 11 இடங்களில் கலங்கரை விளக்கங்கள் நிறுவப்பட்டுள்ளன; இவற்றில் ஒன்றுதான் மேற்சொன்ன புதிய முறையில் -- சூரிய ஒளியின் உதவியால்-- இயங்குகிறது.

சூரிய ஒளியை ஈர்த்து அதனை மின்சக்தியாக மாற்றும் 'செல்'கள் இந்த கலங்கரை விளக்கத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. இப்படிச் சேகரிக்கப்படும் மின்சக்தி, இதனுள் வைக்கப்பட்டுள்ள 12-வோல்ட் பாட்டரியை 'சார்ஜ்' செய்யப் பயன்படுகிறது. இப்படி சக்தி பெறும் பாட்டரி பின்னர் கலங்கரை விளக்கம் ஒளிதர உதவுகிறது. இதில் குறிப்பிடத்தக்கது சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி தயாரிக்கப்படுகிறது என்பதாகும்.

பாட்டரி 'சார்ஜ்' செய்வதற்குத் தேவைப்படும் மினசக்தியைவிடப் பல மடங்கு அதிகமான மின்சக்தியை, இந்த 'செல்'கள், சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கின்றன. இப்படி அதிகமாக உள்ள மினசக்தியைத் தேக்கி வைக்கவும் இதில் வசதி செய்யப்பட்டுள்ளது. குளிர் காலங்களில் சூரிய ஒளிக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது, இப்படித் தேக்கி வைக்கப்படும் மின்சக்தி பயன்படுகிறது.

கலங்கரை விளக்கத்தில் உள்ள விளக்கிலும் புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். எட்டு விதமான நிலைகளில் உள்ள விளக்கு இதில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏதேனும் ஒரு பல்பு வேலை செய்யாவிட்டாலும், அது தானாகவே அப்புறப்படுத்தப்பட்டு, அதற்குப் பதிலாகப் பிறிதொரு பல்பு அந்த இடத்தைப் பிடித்துக்கொள்கிறது.

இருள் நேரங்களில்தான் இந்த விளக்கு ஒளியை உமிழும். வெளிச்சம் வந்தால் தானே அணைந்துவிடும். இந்த இயக்கங்கள் எல்லாம் 'ஆட்டோமாடிக்'!

தரைக்கடியில் அரண்மனைக் கட்டிடம்

நாகையில் கண்டுபிடிப்பு

நாகை, அக். 29—

நாகையில் தரைக்கடியில் ஒரு சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சுரங்கத்திற்குள் காணப்படும் கட்டிட அமைப்பு அரண்மனை மண்டபம்போல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நாகை வெளிப்பாளையம் பகுதியில் உள்ள மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தின் கீழே இந்தச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாகை பொதுப்பணித் துறை நீர்ப்பாசனப் பிரிவைச் சேர்ந்த கண்காணிப்பாளர் திரு. சண்முகம் என்பவர் மேலதிகாரிகட்குப் பின்வருமாறு அறிவித்துள்ளார்:—

"கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுரங்கக் கட்டிடப் பகுதியின் அறை 15 அடி நீளமும் 14 அடி அகலமும் 6¼ அடி உயரமும் உள்ளதாக இருக்கிறது. இதேபோல் கட்டடம் முழுவதும் மண்டபம் போன்ற அறைகளும், அரண்மனை போன்ற அமைப்புக் கொண்டதாக உள்ளது; ஆனால், உள்ளே செல்வதற்கான வழிகள்தான் சரியாக இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் முயற்சி மேற்கொண்டால் வெற்றி பெறலாம்."

மண் குடிசைகளில் வாழும் 'இந்நாட்டு மன்னர்'

எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடம்

புதுடில்லி, அக். 28—

இந்தியாவில் நகரங்கள் நிறைய இருந்தாலும், நகரங்களில் வாழும் ஏழைமக்கள் மோசமான நிலையில்—கூரை கூட சரிவர இல்லாமல் -- மண்குடிசைகளில் வாழ்கிறார்கள்!

இந்தியா முழுவதிலுமுள்ள நகரங்களில் 26.1 சதவிகித ஏழைமக்கள் மண்குடிசைகளில் வாழ்கிறார்கள்!

இந்தியா முழுவதிலும் ஒரிசா மாநிலத்தில்தான் நகரப் பகுதிகளில் 46.5 சதவிகித மக்கள் மண்குடிசைகளில் வாழ்கிறார்கள்!

இரண்டாவதாக மத்தியப் பிரதேசத்தில் 44 3 சதவிகித மக்களும், மூன்றாவதாகத் தமிழகத்தில் 41.6 சதவிகித ஏழைமக்களும் மண்குடிசைகளில் வாழ்கிறார்கள்!

புதுடில்லிப் பொருளாதாரவளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த குல்தீப் சந்தர் ஷேகல் மேற்கண்ட புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி,'சீமான்களும், கோமான்களும் சிங்கார வாழ்க்கை நடத்தும் நகரங்களில், ஏழை மக்கள் எவ்வளவு மோசமாக அவல வாழ்க்கை நடத்துகிறார்கள்' என்று வேதனையோடு கூறினார்.

"காந்தியின் நூற்றாண்டு விழாவுக்கு இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவோர், 'தரித்திரநாராயணர்'கள் என்று காந்தியார் வர்ணித்த இலட்சக்கணக்கான ஏழைமக்களின் வாழ்க்கை நிலையையும் உயர்த்தப் பாடுபட வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இறக்குமதியில் வெட்டு

ரூ. 700 கோடி மிச்சம்!

புதுடில்லி, அக். 28—

1997—68-ம் ஆண்டில் இந்திய அரசு, கடுமையான இறக்குமதிக் கொள்கையைக் கையாண்டதன் விளைவாக முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டில் இறக்குமதி லைசென்சுகள் ரூ. 700 கோடி அளவுக்குக் குறைந்திருக்கிறது.

1966—67-ல், ரூ. 1810.18 கோடி மதிப்புக்கு மொத்தம் 1,57,167 லைசென்சுகள் அளித்ததற்கு மாறாக, 1967—68-ல், ரூ. 1,110 39 கோடி அளவுக்கு மொத்தம் 85,998 லைசென்சுகள் மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றன.

தென்னகத் தோட்டத்தொழிலாளர் ஊதிய உயர்வுக் கோரிக்கை

மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் விவாதிப்பர்

புதுடில்லி, அக். 31—

தென்னிந்தியாவிலுள்ள சில தோட்டத் தொழிலாளர் சங்கங்கள், ஊதிய உயர்வுக் கோரிக்கைகளை எழுப்பியுள்ளதையடுத்து ஏற்பட்டிருக்கும் நிலைமை பற்றி தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களின் தொழிலாளர் நல அமைச்சர்கள் விவாதிப்பார்கள்.

மாநில அமைச்சர்களின் கூட்டம் நவ. 8-ம் நாள் நடைபெறும்.

தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திரப்பிரதேசம், மகாராட்டிரம், கோவா ஆகியவற்றின் அமைச்சர்கள் கூட்டத்தை மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கூட்டியிருக்கிறார். பீடித் தொழிலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியங்களில் உள்ள ஏற்றத் தாழ்வுகள்—பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டத்தை அமுல் நடத்துவது ஆகியவை பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

வெள்ளத்தினால் கல்வி நிறுவனங்கட்கு ஏற்பட்ட நட்டம்

கல்கத்தா, அக். 30—

வடக்கு வங்காளத்தில்—குறிப்பாக டார்ஜிலிங், ஜல்பைகுரி, கூச்பிகார் மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கல்வி நிறுவனங்களுக்கும், மாணவர்களுக்கும் சுமார் ரூ. 1 கோடி நட்டம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாப்புப் பை!

பள்ளிக் குழந்தைகள்மீது கார் மற்றும் பிற ஊர்திகள் மோதிவிடாமல் ஓட்டுநர்கட்கு 'எச்சரிக்கை' செய்யும் ஒரு புது மாதிரியான புத்தகப் பையை, பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது.

இந்தப் புத்தகப் பையின் இருபுறத்திலும் ஒளி காட்டும் தனிக் கலவையுடன் ஆரஞ்சு நிறம் பூசப்பட்டுள்ளது. பகலானாலும் சரி -- இரவானாலும் சரி -- இதன்மீது ஒளிபட்டு மின்னும்; கண்ணாடிபோல் பளபளக்கும். கணிசமான தொலைவில் வரும்போதே மோட்டார் ஓட்டிகளுக்கு இந்த ஒளி எச்சரிக்கை செய்துவிடுகிறது. எந்தக் கோணத்தில் இருந்தாலும் இந்தப் பை ஒளியை உமிழத் தவறுவதில்லை.

பள்ளிக்கு நடந்து செல்லும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு ஏற்ற இந்தப் புதுவகைப் புத்தகப் பை, இப்போது ஏராளமாது எண்ணிக்கையில் தயாராகி ஏற்றுமதித் துறையிலும் நுழைந்து கொண்டிருக்கிறது; குறிப்பாக வளரும் நாடுகளில் இவற்றிற்கு நல்ல வரவேற்பு.

சென்னை 110வது வட்ட அண்ணா படிப்பகம்

சென்னை 110-வது வட்டம் டாக்டர் ராதாகிருஷ்ணபுரத்தில் தி. மு. க. துணை மன்றமாக அறிஞர் அண்ணா படிப்பகம் துவக்கப்பட்டு 2—10—68 அன்று நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பி ஆர். வரதன்; செயலாளர்: பி. வேணு; துணைச் செயலாளர்: பி. நடராசன்; பொருளாளர்: ஏ. அண்ணாமலை.

13—10—68 அன்று மாநகராட்சி மன்ற உறுப்பினர் வ. புருடோத்தமன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பன் அவர்கள் அறிஞர் அண்ணா படிப்பகத்தின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். கழக வேட்பாளர் லோகநாதன் நன்றி கூறினார்.

முழு உடல்நலம் பெற்றுத் திரும்புகிறார் அண்ணா

நவ. 2-ம் நாள் நியூயார்க்கிலிருந்து புறப்பாடு

வருகிற புதன் கிழமை காலையில் சென்னை வந்தடைகிறார்

நியூயார்க், அக். 30—

அமெரிக்காவிலிருந்து முதலமைச்சர் அண்ணா அவர்கள், தாயகத்திற்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறார்.

விமான டிக்கெட்டுகள் வாங்கப்பட்டுவிட்டன; பயணத்துக்கான 'பாஸ்போர்ட்', 'விசா' ஆகியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நவம்பர் 2-ம் நாள் இரவு 8 மணிக்கு நியூயார்க்கிலிருந்து புறப்படுகிறார்.

நவ. 3-ம் நாளன்று இலண்டன் வந்து சேரும் அவர், அங்கு ஓய்வு எடுத்துக்கொள்வார்.

நவ. 4-ம் நாளன்று இலண்டனிலிருந்து புறப்படுகிறார்.

நவ. 5-ம் நாளன்று பம்பாய் வருகிறார்.

பின்னர் அங்கிருந்து பயணமாகி நவ. 6-ம் நாள் காலை 8-20 மணியளவில் சென்னை—மீனம்பாக்கம் விமான நிலயம் வந்து சேருகிறார்.

அவருடன் இராணி அம்மையார், பரிமளம், டாக்டர் சதாசிவம், இரா. செழியன், க. இராசாராம் ஆகியோரும் வருகின்றனர்,

இரஷ்யாவின் விண்வெளி வீரர்

33 முறை பூமியைச் சுற்றிவிட்டார்

இடியுடன் கூடிய புயல்காற்றை நேரில் கண்டார்

விண்வெளியில் இரஷ்யா செலுத்தியுள்ள 'சோயூஸ்-3' விண்கலம், தொடர்ந்து விண்ணில் பறந்துவருகிறது.

விண்வெளி வீரர் ஜியார்ஜி பெரிகோவாய் இயக்கிவரும் அந்த விண்கலம், பூமியை 33 முறை சுற்றி முடித்தது.

விண்கலத்தின் எல்லா அமைப்புகளும் நல்ல நிலையில் தொடர்ந்து வேலைசெய்து வருகின்றன; விண்கலத்தினுள் காற்று அழுத்தமும், வெப்ப நிலையும் ஏற்கனவே அமைக்கப்பட்ட அளவிற்குள்ளேயே இருந்துவருகிறது; பெரிகோவாய் நன்ருக இருந்து வருகிறார்.

விண்வெளி வீரர் பெரிகோவாய் திட்டமிட்டபடி விஞ்ஞானப் பரிசோதனைகளைத் தொடர்ந்து வருகிறார். பூமியின் மேற்பரப்பை மூடியுள்ள மேகங்களைக் கண்கூடாகக் காணுதல் -- நட்சத்திரம் நிறைந்த வானத்தை ஆராய்தல் ஆகியவை தொடர்ந்து நடைபெறுகின்றன.

பூமியை 33-வது முறையாகச் சுற்றும்போது அவர், மூன்று வனங்கள் நெருப்புப் பற்றி எரிவதை மேலிருந்து கண்டார்.

பூமத்திய ரேகைப் பிரதேசத்தில் இடியுடன் கூடிய புயல்காற்றையும் மிகத் தெளிவாகப் பார்த்திருக்கிறார்.

நிலையான இரு வழி ரேடியோ செய்தித் தொடர்புகள், விண்வெளி வீரருடன் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

இந்தியாவின் அமெரிக்கத் தூதர் சென்னை வருகை

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவார்

சென்னை, அக். 30—

அமெரிக்கத் தூதர் செஸ்டர் போல்ஸ் அக். 31-ம் நாள் சென்னைக்கு வருகிறார்; நீலகிரியில் வெல்லிங்டனில் ராணுவக் கல்லூரிச்கு வந்துவிட்டு டில்லி செல்லும் வழியில் சென்னையில் சிறிது நேரம் தங்கியிருக்கையில், தமிழக அரசின் தலைமைச் செயலகம் சென்று அதிகாரிகளைக் கண்டு பேசுவார்.

அங்கு கோட்டையில் உள்ள செயின்ட் மேரி தேவாலயத்தில் வரலாற்றுக் கூடம் ஒன்றைத் தூதர் போல்ஸ் திறந்து வைப்பார். அது எலிஹூ யேல் என்ற முன்னாள் சென்னை கவர்னரின் நினைவாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிட்டிஷ் கவர்னர்தான், அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகத்திற்கு முன்பு நிரம்பப் பொருள் உதவி செய்த ஒருவர்.

பிராங்பர்ட்டில் சத்தியவாணிமுத்து

ஜெனிவாவில் வரவேற்பு விருந்து

பிராங்பர்ட், அக். 29—

தமிழக அரசின் செய்தித் துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து மேற்கு ஜெர்மனி செல்லும் வழியில் ஜெனிவாவிலிருந்து இங்குவந்து சேர்ந்தார்.

இங்கு அவர், சமுக நல அமைப்புக்களையெல்லாம் சுற்றிப் பார்ப்பார். அக். 31-ஆம் நாள் ஆம்ஸ்டர்டாமிலிருந்து மேற்கு பெர்லினுக்குப் புறப்படுவார்.

மாணவர்களுக்கும் இடம்

திருவனந்தபுரம், அக். 30—

கேரளப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவில் (செனட்) மாணவர்களுக்கும் இடமளிக்கக் கேரள அரசு முடிவு செய்துள்ளது.

ஜெனிவாவில்

ஜெனிவா, அக். 29—

நேற்று அவர் சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவா வந்து சேர்ந்தார். அவரை இந்தியப் பிரதிநிதி திரு. என். கிருஷ்ணன் வரவேற்று அழைத்துச் சென்றார்; தம் இல்லத்தில் விருந்தளித்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டின் இயற்கை எழிலை அமைச்சர் கண்டுகளித்தார்.

தாம் சுற்றுப் பயணம் செய்யவிருக்கும் நாடுகளில் அமைச்சர், பெண்கள் முன்னேற்றம் -- திரைப்படத்தொழில் -- செய்தித் துறை ஆகியவை பற்றி அறிந்துவருவார்.

'நெருக்கடியினின்றும் இந்தியப் பொருளாதாரம் மீண்டுவிட்டது'

'கடனுதவியை மீண்டும் துவக்குங்கள்'

ஜப்பானிடம் இந்தியா கோரிக்கை

டோக்கியோ, அக். 30—

"இந்தியப் பொருளாதார நிலை நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்துவிட்டது; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்குவதற்கு அது தயாராக இருக்கிறது; எனவே, இரண்டாண்டுகளாக வாங்காமலிருந்த திட்டப் பிணைப்புள்ள யென் கடனுதவி ஏற்பாட்டை மீண்டும் துவக்கவேண்டும்"

என்று ஜப்பானின் துணை நிதியமைச்சரிடம், இந்தியாவின் துணை நிதியமைச்சர் கே. சி. பந்த் கோரினார்.

குறிப்பிட்ட திட்டங்களுக்கான பொருள்களின்கொள்முதலுக்கு, பின்னால் பணம் தரும் வகையில், கடனுதவிகளை இந்தியா கோருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் திட்டப் பிணைப்புள்ள கடன் ஏற்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்தக் காலத்தில் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக -- அவசரமாகத் தேவைபட்ட தொழிற்சாலைக் கருவிகளை வாங்குவதற்காக --- 'யென்' கடன் தொகையில் கணிசமான பகுதிகள் வேண்டியிருந்ததால், இந்தியா திட்டப் பிணைப்புக் கடன்களைப் பயன்படுத்தவில்லை.

சட்ட அமைச்சர்

செ. மாதவன்

நிகழ்ச்சிகள்

நவ. 1: காலை 10 மணி: அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் குழுக் கூட்டத்தைத் துவக்கி வைத்தல்; மாலை 4 மணி: கடலூர் — தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி பொன் விழா.

நலத்துறை அமைச்சர்

சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 31: காலை 4-02 மணி: தஞ்சாவூர்—ஆய்வாளர் மாளிகையில் தங்கல்; ஒரத்தநாடு தொகுதியில் திரு. சோமசுந்தரம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளல்.

மாநகராட்சித் தேர்தல் — தலைவர்கள் கருத்து

சென்னை, அக். 30 —

நடந்து முடிந்த சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் பற்றி அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., பெரியார் ஈ. வெ. ரா. ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:—

மு. கருணாநிதி

"தி. மு. கழகமும், தோழமைக் கட்சிகளும் மாநகராட்சி மன்ற நிர்வாகத்தை மீண்டும் கைப்பற்றியிருக்கின்றன.

தூண்டிவிடப்பட்ட துரோகச் சக்திகள், கழக வேட்பாளர்களுக்கு எதிரிடையாக இல்லாமல் இருந்திருந்தால், இன்னும் அதிக இடங்கள் கிடைத்திருக்கக் கூடும்.

இருப்பினும், மாநகராட்சி நிர்வாகத்தைக் காங்கிரசின் கையில் ஒப்படைக்க விரும்பாத சென்னை வாக்காளப் பெருமக்கள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்."

கே. ஏ. மதியழகன்

"தேர்தல் முடிவுகள் குறித்துத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ள கருத்து தவருன எண்ணத்தை உண்டாக்குவதாக உள்ளது.

காங்கிரசின் பக்கம் மக்கள் ஆதரவு பெருகிவருவதாக அவர் சொல்கிறார்; ஆனால் அது உண்மை அல்ல!

இந்தத் தேர்தல் முடிவைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம், தன் வலிவைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை!

கடந்த தேர்தலில் 50 இடங்களைப் பெற்றோம்; இப்போது அது 54-ஆக உயர்ந்துள்ளது.

முஸ்லிம் லீக் எண்ணிக்கை ஐந்திலிருந்து ஏழாக ஆகி உயர்ந்திருக்கிறது.

மாநகராட்சி மன்றத்தில் இது வரையில் இடம் பெருத சுதந்திரா, இடது கம்யூனிஸ்டு, உழைப்பாளர் கட்சிகள் இடம் பெற்றுள்ளன; இது சனநாயகத்திற்குப் புதிய வலிவாகும்.

காங்கிரசுக் கட்சியின் பலம் 40-லிருந்து 52 ஆக ஆகியிருப்பது உண்மைதான்; ஆனாலும், இது காங்கிரசின் தனிப்பட்ட வெற்றியென சுப்பிரமணியம் உரிமை கொண்டாட முடியாது.

அதிருப்தியாளர்கள் சில வட்டங்களில் காட்டிய சுணக்கத்தினாலும் வேலை செய்யாததன் காரணமாகவும் தி மு. க. அவ்விடங்களில் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறது.

ஆகவே, காங்கிரசுக்குப் புதிதாகக் கிடைத்த இடங்களில் காங்கிரசு வென்றதாகக் கூற மாட்டேன், அவை, காங்கிரசு ஆதரவு வாக்குகள் அல்ல!

கழகத்துக்கு 54 இடங்கள் கிடைத்தபோதிலும், ஆதித்திராவிட உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் உரிமை சட்டப்படி இருப்பதால் தி. மு. க.-வின் பலம் உயரும்.

கழகத்தின் கட்டுப்பாடு கண்ணின் மணிபோல் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற அவசர எச்சரிக்கைப் பலகைதான் நம்முன் நிற்கிறது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதனை, இந்தத் தேர்தல் முடிவு நமக்குக் காட்டுகிறது!"

என். வி. நடராசன்

"தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காத 30 பேர், அதிகாரபூர்வமான கழக வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டார்கள். அவர்களுடைய துரோகத்தையும் மீறி, 14 இடங்களில் கழக வேட்பாளர்களும், கூட்டணி வேட்பாளர்களும் வெற்றி பெற்றார்கள்; மீதி 16 இடங்களில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

இவர்கள் துரோகம் செய்யாமல் இருந்திருந்தால், கழகத்துக்கு மேலும் 16 இடங்கள் கிடைத்திருக்கும்; தி. மு. கழகம் தனித்துப் பெரும்பான்மையான பலம் பெற்றிருக்க முடியும்.

துரோக சக்திகள் காரணமாகக் கழகத்துக்கு வரவேண்டிய சில இடங்கள் காங்கிரசுக்குக் கிடைததுள்ளன; ஆனால், இதைக்கொண்டு காங்கிரசின் சக்தி வளர்ந்துள்ளதாக யாரேனும் கருதினால் அது தவருகும்.

கழகத்திற்கும், கூட்டணிக்கும் இந்த அளவு ஆதரவு கொடுத்த பொதுமக்களுக்கு நன்றி."

பெரியார்

"சென்னை மாநகராட்சித் தேர்தலில், தி. மு. கழகத்துக்கு 54 இடங்கள் கிடைத்துள்ளன.

"போட்டியிட வாய்ப்புக் கிடைக்காதவர்கள் தி. மு. கழகத்தை எதிர்த்து வேலை செய்ததாகவும் அறிந்தேன்.

"இந்தக் குறைகள் இல்லாமல் இருந்திருந்தால், இன்னும் அதிக இடங்கள் கிடைத்து இருக்கலாம்.

"இந்தச் சமயத்தில் அண்ணாதுரை இங்கு இருந்திருந்தால் தேர்தல் முடிவு இன்னும் நன்ருக இருந்திருக்கும்."

மாநகராட்சி மன்ற ஆண்டு விழா

சென்னை மாநகராட்சி மன்றத்தின் 281-ஆவது ஆண்டு துவக்க நாள் விழா 31—10—68 மாலை 5 மணிக்கு நேரு விளையாட்டரங்கில் நடைபெறும்; தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், விழாவைத் துவக்கிவைப்பார்; உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமைதாங்குவார்; சர்தாரிணி உஜ்ஜல் சிங், வெற்றி பெற்றோர்களுககுப் பரிசுகள் வழங்குவார்.

திருமணம்

தஞ்சை மாவட்ட தி. மு. க. பிரதிநிதி சுங்காங் திடல் செல்வன்: ஆர். ஜி. இராசனுக்கும்—செல்வி: புடபாவுக்கும் 31—10—68 காலை 10-30 மணியளவில் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், தஞ்சை இராமநாதன் செட்டியார் மண்டபத்தில் திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] ரோடு, சென்னை-[illegible]) [illegible]